**இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் I - 2014**

இரத்தினபுரி பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் I இன் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) பான்கோ பில்பாவோ விஸ்காய ஆர்ஜன்டரிய எஸ்ஏ க்கும் (பீபீவீஏ) இடையில் கைச்சாத்திட்ட 2013 சனவரி 15 ஆந் திகதிய எஸ்ஆர்எல் - 038412 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. சப்ரகமுவ மாகாணத்தில் குடிதண்ணீர் வசதிகளை நிர்மாணித்து மற்றும் விரிவாக்குவதன் மூலம் பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கல் வசதிகள் வழங்குவதுடன் அதன் மூலம் அப்பகுதிகளில் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதற்கும் வறுமையை குறைப்பபதற்கும் பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கொளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,493.66 மில்லியனிற்கு சமமான யூரோ 26.65 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,698.06 மில்லியனிற்கு சமமான யூரோ 21.93 மில்லியன் பான்கோ பில்பாவோ விஸ்காய ஆர்ஜன்டரிய வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியால் (டிஎவ்சீசீ) ரூபா 652.60 மில்லியனிற்கு சமமான யூரோ 3.87 மில்லியன் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 143.0 மில்லியனிற்கு சமமான யூரோ 0.85 இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 யூலை 24 இல் தொடங்கியிருந்ததுடன் 2015 யூலை 24 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2015 நவம்பர் 24 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------------

### 2.1 அபிப்பிராயம்

--------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------

மீளாய்வாண்டின் போது ரூபா 24.42 மில்லியனில் கொள்வனவு செய்யப்பட்ட 03 மோட்டார் வாகனங்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலையின் கீழ் பதியப்பட்டிருந்ததது.

#### 2.2.2 இனங்காணப்படாத மீதிகள்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தகவல்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்கத்தின் பங்களிப்பு ரூபா 62.28 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 73.98 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தகவல்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 623.48 மில்லியன் தொகையான வெளிநாட்டு நிதிகள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 3,081.30 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் |
| பீபீவீஏ | 21.93 | 3,698.06 | 623.48 | 9.72 | 1,625.25 | 13.30 | 2,257.03 |
| டிஎவ்சீசீ | 3.87 | 652.60 | - | - | - | 3.87 | 658.76 |
| இலங்கை அரசாங்கம் | 0.85 | 143.00 | 63.00 | 0.44 | 73.98 | 0.47 | 79.38 |
| **மொத்தம்** | **26.65** | **4,493.66** | **686.48** | **10.16** | **1,699.23** | **17.64** | **2,995.17** |

பட்டியலிடப்பட்ட காலப் பகுதிக்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்ட நோக்கங்களின் எய்தலை உறுதிப்படுத்துவதற்கு செயற்திட்டத்தின் முழுக் காலத்தையும் மேவி மாதாந்த, காலண்டு, அரையாண்டு முதலியவற்றில் நிர்யணிக்கின்ற பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற ஒட்டுமொத்த விரிவான செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஏவ்வாறாயினும், அத்தகைய திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 57 சதவீதம் மற்றும் 78 சதவீதமாக இருந்தது. சிவில் நிர்மாண வேலைகள், மாசுபட்ட மற்றும் சுத்தமான தண்ணீர் பரிமாற்றம் மற்றும் விடுதிகளின் நிர்மாணம் போன்றவற்றின் வடிவமைத்தல் நடவடிக்கைகள் திருப்திகரமான முன்னேற்றத்தை காட்டியிருந்த போதிலும், சேகரிப்பு தொட்டிகளின் நிர்மாணம், தண்ணீர் சுத்திகரிப்பு, நிலத்தடி நீர் தேக்கம் மற்றும் அலுவலக கட்டிடம் போன்றவற்றின் ஏனைய நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 இல் மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

(ஆ) நிர்மாணங்களிற்கான ஒப்பந்தகாரரிற்காக வேலைத்தளம், தண்ணீர் சுத்திகரிப்பு பொறிகளின் நிர்மாணத்திற்கான காணிகளின் உரிமையாண்மை, அலுவலக கட்டிடங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் செயற்திட்ட உத்தியோகத்தர் விடுதிகள் என்பவற்றினை கையளிப்பதற்கு முன்னர் காணிகளின் உரிமையாண்மை மாற்றப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 வரையும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் சாத்திய வளக் கற்கை அறிக்கையின் பிரகாரம், விநியோக கொங்றீட் தண்ணீர் தொட்டியொன்றின் நிர்மாணத்திற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரின் ஒத்துழைப்பினை பெற்றபின்னர் 02 தண்ணீர் தொட்டிகள் கொங்றீட் தொட்டிகளின் நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட யூரோ 2.18 மில்லியனிற்கு சமனான ரூபா 357.2 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் உருக்கு முலாமைப் பயன்படுத்தி நிரிமாணிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், கொங்றீட் நீர்த் தொட்டிகளின் சராசரி ஆயுள் காலம் 50 ஆண்டுகளில் இருந்த அதேநேரம், உருக்கு முலாம் தண்ணீர் தொட்டிகளின் பயன்பாட்டு ஆயுள் காலம் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தரவாத சான்றிதழின் பிரகாரம், 20 ஆண்டுகளாக இருந்தது.

(ஆ) பெறப்பட்ட தகவலின் பிரகாரம், தண்ணீர் சுத்திகரிப்பு பொறி மற்றும் பொம்பேகெலவின் நீரிறைத்தல் நிலையம் என்பவற்றின் 13,000 கன மீற்றர் மொத்த இயலளவின் 32.26 சதவீதம் மீளாய்வாண்டின் போது நுகரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீரிறைக்கும் நிலையத்தால் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட தண்ணீர் என்பவற்றின் பயன்பாட்டு அதிகரிப்பிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

செயற்திட்டக் கணக்காளர் மற்றும் முகாமைத்துவ உதவியளரின் பதவிகள் 2014 பெப்ரவரி 11 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 வரையும் உரிய பதவிகளிற்கு பொறுப்பான நபர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், செயற்திட்டத்தின் பொதுப் பேரேடு மற்றும் நிதித் தகவல்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.5. நிதிக் கட்டுப்பாடு மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 626 இன் பிரகாரம், ஒவ்வொரு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு அமைய பேணப்பட்ட செயற்திட்டத்தின் புறம்பான கணக்கேடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 12 நன்கொடையாளர் நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் பதிவதற்கு ஒரே காசுப் புத்தகத்தகம் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் தனித்தனியான காசுப்புத்தகத்தை பேணப்படாமல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கணக்கீட்டுப் பிரிவால் ஒரே காசுப்புத்தகம் பேணப்பட்டிருந்தது.